சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 2/2015

இந்நீதிமன்றத்தின் எழுத்தர் திருமதி. ஆர்.ரேணுகாதேவி, Grade II, Bench Clerk, என்பவரால் முறையோடு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10 வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு 2021 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் ஆராவமுது | நாள். 24.11.2021 |
| வயது.45 | வட்டம் மதுராந்தகம் |
| கிராமம். மேட்டு ஊனமலை | மாவட்டம். செங்கல்பட்டு |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>**

நான் இந்த வழக்கில் 1 வது பிரதிவாதி. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலம் நான் சொல்லிதான் தயாரிக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 21.10.1979 தேதியிட்ட எனது தந்தை பக்கிரிசாமிக்கு எனது பாட்டி ராஜம்மாள் எழுதிக்கொடுத்த அசல் உயில் ஆவணம் **பி.வா.த.சா.,ஆ.2**. (மேற்படி ஆவணத்தை ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). 16.06.2005 தேதியில் எனது தந்தை பக்கிரிசாமி எனக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் அசல் **பி.வா.த.சா.ஆ.3.** 20.10.1954 தேதியிட்ட கன்னைய்யா நாயுடு மற்றும் சக்கரபாணி நாயுடு ஆகிய இருவரும் எனது பாட்டி ராஜம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட

நகல் **பி.வா.த.சா.ஆ.4.** 10.02.1953 தேதியிட்ட அய்யாமுலு நாயுடு, எனது பாட்டி ராஜம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.5.** 24.03.1953 தேதியிட்ட கோபால்ராவ் நாயுடு எனது பாட்டி ராஜம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ–6.**(பி.வா.த.சா.ஆ.6 ஆவணம் தெளிவாக இல்லை என்று மேற்படி ஆவணத்தின் தட்டச்சு நகல் தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டும், வாதி தரப்பில் எழுப்பப்பட்ட ஆட்சேபணை பதிவு செய்யப்பட்டும், ஆட்சேபணைக்கு உட்படுத்தப்பட்டும் குறியீடு செய்யப்படுகிறது) தாவாவை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.